நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இப்பேர்பட்டவர்களுக்கு இடம் கொடுத்து விட்டு, அதன் பின்னால் இது போன்ற ஒரு மசோதாவைக் கொண்டு வர வேண்டும் என்பது தான். நகரத்திலுள்ள சேரிகளை எல்லாம் போக்க வேண்டும் என்ற நினைப்பில் வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தை சர்க்கார் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் கிராமங்களை எடுத்துக் கொண்டால், கிராமங்களில் இதைப்பற்றி எதிர்க் கட்சிகள் பிரசாரம் செய்ய வேண்டிய தேவை யில்லை. பொதுவாக இந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு கிராமங்களில் இருக்கின்ற ரெவின்யூ அதிகாரிகள் இதைப் பலவாறாக உபயோகித்துக் கொண்டிருப்பார்கள். இதைப்பற்றி முக்கியமாக என் கண் முன்னால் தோன்றியது கிராம கர்ணம் தான். இன்றைக்கு அவர்களுடைய தயவில் தான் கிராமத்திலுள்ள ஜனங்கள் புறம்போக்கு இடங்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இப்பேர்பட்ட ஒரு சட்டமும் வந்து விட்டால் அவர்களுடைய தொல்லையைப்பற்றி சொல்லவே முடியாது. ஆகவே இதையெல்லாம் சர்க்கார் கருத்தில் கொண்டு, இதை நல்ல முறையில் சீர்திருத்தி அமைப்பதற்காக ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு, அனுப்பிக் கொஞ்சம் காலம்தாழ்த்தி, எந்த குறிக்கோளுக்காக இது கொண்டுவரப் பட்டிருக்கிறதோ அந்த குறிக்கோள் நிறைவேறுகின்ற முறையில் இதை மாற்றி அமைத்து அதற்குப் பின்னால் நிறைவேற்றினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

IV.—ANNOUNCEMENTS.

(1) BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I understand from Government that they are not bringing forward the Madras Chit Funds Bill, 1960, in this session. Therefore, it is likely that the Business of the House may be over by to-morrow. I am announcing this information so that hon. Members who want to leave for their respective places to-morrow itself, may make arrangements for their departure.

சிட் பண்ட் மசோதா இப்போது இந்தக் கூட்டத்தில் விவாதத்திற்கு வரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆதலால் நாளைக்கே ஊருக்குப் போகவேண்டிய அங்கத்தினர்கள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

III. GOVERNMENT BILLS—*cont*.

(1) THE MADRAS PUBLIC PREMISES (EVICTION OF UNAUTHORISED OCCUPANTS) BILL, 1960 (L.A. BILL NO. 24 OF 1960)—*cont*.

SRI V. SUBBIAH : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது கிராமப் பகுதிகளில் வரும்போது எவ்வளவு கஷ்டங்களைக் கொடுக்கும் என்பதைச் சற்று சொல்ல விரும்புகிறேன். இந்த மாதிரியான சட்டங்கள் விவாசாயிகளிடையே வரும்போது பெரும்பாலும் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம், இனாம்தார் ஒழிப்புச் சட்டம் வந்தபோதும் சட்ட ரீதியாக எவ்வளவோ பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருந்தும் கூட சாதாரண விவசாயிகளுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் வந்து நேர்ந்தன. ஒருவரின் பெயரில் ஒரு இடம் இருந்தாலும் கூட பல கேஸ்கள் அதைப் பற்றிக் கோர்ட்டில் இருந்து கொண்டிருந்தது. இப்போதும் அதற்குக் கலெக்டர் அவர்களால் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். இவ்விதம் சொல்லப்படுகின்ற இடங்கள் இவ்வாறு தகராறுகள் ஏற்பட்ட பிறகு புறம்போக்கு அல்லது தரீசு என்று அறிவிக்கப்படுகிறது. இந்த